RECEIVED
1979-5-17
PERIODICALS DIVISION
LIBRARY

இதோ நற்செய்தி!
இறக்குமதி செய்யப்பட்ட
TATUNG
தொலைக்காட்சி சாதனம்
(கையில் கொண்டு செல்லக் கூடிய டெலிவிஷன் செற்)
விற்பனைக்கு வந்துவிட்டது.
தொடர்பு கொள்ளவும்: போன்: 693
லீடன் ரேடர்ஸ்
சேகரம் கட்டிடம்,
188/3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
2462

பக்கங்கள் 6 விலை சதம்

# ஈழநாடு
The EELANADU

Registered as a Newspaper at the General PostOffice Sri Lanka under No: QB/8945/78

மலர்: 21 வைகாசி: 3 ஜ-அகிர்: 19 இதழ்: 97
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 17-5-79

இறக்குமதி செய்யப்பட்ட
R. M. I. BICYCLES
(சைக்கிள்)
விற்பனைக்குண்டு.
தொடர்பு கொள்ளவும். போன்: 693
நாபன்ஸ் டிரேட்ஸ்
சேகரம் கட்டிடம்,
74, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
2462

## இலட்சியத்தை விட்டுக்கொடாமல்
# அபிவிருத்தித் திட்டங்களை
# த. வி. கூட்டணி ஆதரிக்கிறது
## பத்திரிகையாளர் மாநாட்டில் விளக்கம்

( கா. யோகநாதன் )

(யாழ்ப்பாணம்)
அரசின் அபிவிருத்தித் திட்டங்களை நாம் தடைசெய்யவில்லை. லட்சியத்தை விட்டுக் கொடுக்காமலே அபிவிருத்தித் திட்டங்களை ஆதரித்து வருகிறோம் என்று நேற்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற நிருபர்கள் மகாநாட்டில் ஊர்காவற்றுறை பிரதிநிதியும் அமைப்புச் செயலாளருமான பண்டிதர் கா. பொ. இரத்தினம் கூறினார்-

பத்திரிகையாளர் மாநாட்டில் யாழ்ப்பாணம் எம். பி திரு. வெ யோகேஸ்வரன் ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம், சட்டத்தரணி எம் ஆலாலசுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணத் தொகுதிக்கு 30 இ. போ ச. ஊழியரை சிபார்சு செய்ய எனக்கு அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சர் ஜனுப் முகமது கூறியுள்ளார். ஆனால் ஒரு கண்டக்டரோ ஒரு மெக்கானிக்கோ இதுவரை நியமிக்கப்படவில்லை.

எனக்கு வழங்கப்பட்ட 30 இ. போ. ச. ஊழியரில் 1 கண்டக்டருக்கோ 1 மெக்கானிக்கோ இன்னும் இடம் கிடைக்கவில்லை, பல தடவை இ. போ. ச. நிர்வாக இயக்குனர் பாபாவுக்கு தந்தி அடித்தேன். ஏமாற்றம்தான் மிச்சம், என்று இந்த மகாநாட்டில் யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் கூறினார்.

பண்டிதர் கா பொ இரத்தினம் கூறியதாவது: 597 புதிய பஸ்களில் 71 டிப்போக்களுக்கு அனுப்பப்பட்டது. யாழ்ப்பாணத்துக்கு ஒன்றும் அனுப்பப்படவில்லை. 100 பஸ்களை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பவிருப்பதாக, அமைச்சர் முகமது கூறியுள்ளார். ஆனால் 154 பஸ்கள் பழுதடைந்துள்ளன.

சட்டத்தரணி எம், ஆலாலசுந்தரம் கூறியதாவது முஸ்லிம் வட்டாரத்திற்கு சுதந்திரகட்சி 71-ம் ஆண்டே பஸ் சேவையை ஆரம்பித்தது. இது அமைச்சருக்கு தெரியாமலிருக்கலாம், இப்போது, தேர்தலுக்காக முஸ்லிம் வட்டாரத்திற்கு புதிய பஸ்சேவை என பிரசாரம் செய்கிறார்,

பண்டிதர் கா பொ: அதுவும் இறுப்பிட்டிக்கு ஓடிய பஸ்ஸை மாற்றி முஸ்லிம் வட்டாரத்திற்கு போட்டிருக்கிறார், புதுபஸ் போடவில்லை, வடமாகாணத்தில் தமிழருக்கு கொடுக்கவிருக்கும் சிற்றூழியர் மின்சார ஊழியர் பதவிகள் சிங்களவருக்கு கொடுக்கப்பட்டு வருகிறது.

எம் ஆலாலசுந்தரம்: வவுனியா முல்லைத்தீவு பகுதியில் அடாத்தாகக் காணிபிடித்தவர்கள் பற்றிய புள்ளிவிபரங்கள் சேகரிப்பதற்கு 400 சிங்கள ஊழியர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நிருபர் ஒருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் பண்டிதர் கா பொ இரத்தினம் கூறியதாவது: அபிவிருத்தி திட்டங்களை நாங்கள் தடைசெய்யவில்லை, மகாதேவா பாலம் அமைக்க நாங்கள் சத்தியாக்கிரகம் செய்கிறோமா? கறுப்புக்கொடி காட்டுகிறோமா? எங்கள் லட்சியத்தை விட்டுக் கொடுக்காமல் அபிவிருத்தி திட்டத்தை ஆதரிக்கிறோம், அபிவிருத்தி என்ற போர்வையில் தமிழ் ஈழத்தில் பிறர் குடியேற்றப்படுவதையும் எதிர்க்கிறோம்.

யோகேஸ்: நாங்கள் கூட்டணிப்பட்டியலில் 6 சிறுபான்மை தமிழர்களுக்கு இடம் ஒதுக்கியுள்ளோம். இதில் 23 பேருக்குள் 4 சிறுபான்மை தமிழர் உள்ளனர்.

கடந்த பொதுத்தேர்தலில், குமார் பொன்னம்பலம், கூட்டணி டிக்கட்டுக்கு விண்ணப்பித்தபோது கூட்டணி கொள்கையை முற்றும் முழுதுமாக ஏற்றுக்கொள்வதாக தெரிவித்துள்ளார் அதை மறுக்கமுடியுமா?

நிருபர்: காங்கிரஸ் பட்டியலிலிருந்து சற்குணநாதன் விலகிவிட்டதாக உங்களுக்கு எப்படி தெரியும்?

பண்டிதர் கா. பொ. தமிழ்க் காங்கிரஸ் பொதுச்செயலாளர் குமார் பொன்னம்பலத்திற்கு அவர் அனுப்பிய விலகல் கடித பிரதி எனக்கும் அனுப்பியுள்ளார்.

பண்டிதர் கா. பொ: அக்கடிதத்தின் பிரதியை நிருபர்களுக்கு காட்டினார்.!

யோகேஸ்: யாழ்ப்பாணத் தொகுதி வெள்ள அபாயம் பற்றி பேராசிரியர் குழு ஒன்று ஆராய, நான் பணிமுகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டத்தில் 50 ஆயிரம் ரூபா ஒதுக்கியுள்ளேன். கொழும்புத் துறை, நரிக்குண்டு பகுதிகளுக்கு குடிநீர் வழங்க நிதி ஒதுக்கினேன். பல இடங்களில் வீடுகட்ட பணம் ஒதுக்கியுள்ளேன். றெக்கிளமேசன், நாவாந்துறை, பண்ணை கடற்கரை, சிறுதீவு, தேவரிகுளம், தாராக்குளத்தில் வீடுகள் கட்டப்படும்.

எம். ஆலாலு; கூட்டணி யாப்பு கடந்த தேர்தலுக்கு பின் தயாரிக்கப்பட்டதாக குமார் கூறுவது தவறு. வட்டுக்கோட்டை மாநாட்டில் யாப்பு நிறைவேறியது, அந்த யாப்புபடியே அமரர் ஜி. ஜி. யும் கூட்டணி தலைவரில் ஒருவராக நியமிக்கப்பட்டார்.

யோகேஸ்: அமரர் ஜி. ஜி. வட்டுக்கோட்டை மாநாட்டின் பின் கூட்டணித் தலைவர்களில் ஒருவராக இறக்கும்வரை இருந்தார். அதனால்தான் தமிழ்த்தலைவர்களுக்காக டிரயல் அட்பார் வழக்கில் ஆஜரானார். 3 தலைவர்களும் ஒன்றாக சேர்ந்து படமெடுத்தனர். அவர்கள் கட்டிவளர்த்த ஒற்றுமையை இத்தேர்தல் மூலம் நிலைநாட்டுவோம். (க)

TELEVISION
யாழ்ப்பாணத்தில் தவணை முறையில் மாதாந்தம் பணம் செலுத்தி இலகுவான முறையில் 12'' கறுப்பு வெள்ளை ரெலிவிஷனைப் பெற்றுக் கொள்ளலாம். முதலில் 500/- மட்டுமே செலுத்தவேண்டும்.
ஆறு வாரங்களில் உங்களுக்கு ரெலிவிஷன் கிடைக்கும். மொத்தவிலை: 1800/-
விபரங்களுக்கு:
EXTERNAL STUDIES ORGANIZATION
148/1, Stanley Road, Jaffna. TelePhone: 7715
2475

## தமிழர் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு
# கருத்து வழங்க அழைத்தோம் கூட்டணியினர் வரவில்லை
### அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா

(யாழ்ப்பாணம்)
''புதிய அரசியல் அமைப்பு தயாரிக்கப்படு முன்னர், தேர்தலில் வெற்றிபெற்ற அரசியல் கட்சி எம் பி க்களை, வட்டமேசை மாநாடு போன்ற ஒரு அமைப்புக்கு அரசாங்கம் அழைத்திருந்தது. தமிழ்மக்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதற்கு கருத்து வழங்குமாறு நாம் கேட்டும் கூட்டணியினர் அந்த அழைப்பை நிராகரித்து விட்டனர்''

நாவாந்துறையில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிய இளைஞர் வேலைவாய்ப்பு அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்கா மேற்கண்டவாறு கூறினார்.

திரு ம. செல்வம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் அமைச்சர் விக்கிரமசிங்கா மேலும் கூறியதாவது;

கடந்த காலத்தில் ஆட்சி செலுத்திய அரசாங்கத்திடம் போதிய பணம் இல்லாததால் நாட்டைத் திருத்தவில்லை. எமது அரசிடம் போதிய பணம் இருக்கிறது. எம்மால் நாட்டை அபிவிருத்திசெய்ய முடியும்.

வடபகுதி தவிர்ந்த ஏனைய பகுதி எம் பிக்கள் அரசோடு ஒத்துழைத்துத் தமது தொகுதிகளை முன்னேற்றியுள்ளனர். வடபகுதி எம். பிக்கள் ஒத்துழைக்காததினால் அப்பகுதி அபிவிருத்தியடையவில்லை.

தார்மீக அரசு ஆட்சிக்கு வந்தபின் யாழ்மாவட்டத்தின வீதிகளைத் திருத்தவும், பாடசாலைகளில் புதுக்கட்டிடங்களை அமைக்கவும், மின்சார வசதிகள், ஏற்படுத்தவும் குடிதண்ணீர்க்கிணறுகள் வெட்டவும் பணிமுகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்து 3 கோடி 30 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளோம், நாம் யாழ்ப்பாணம் வந்தபோது வீதிகள்கூடச் செப்பனிடப்படவில்லை. எனவே நாம் எமது நேரடி நிர்வாகத்தின் கீழ் நாட்டை முன்னேற்றும் பொருட்டு உள்ளூராட்சித் தேர்தலில் எமதுகட்சி வேட்பாளர்களை நியமித்துள்ளோம் அவர்களிடம் தமிழ்மக்கள் ஆட்சியை ஒப்படையுங்கள் அவர்கள் நாட்டை அபிவிருத்தியடையச் செய்வார்கள் என்றார்.

#### கடல் தொழில் அமைச்சர்

கடல் தொழில் அமைச்சர் திரு பெஸ்டஸ் பெரேரா பேசுகையில், எந்த அமைச்சரும் எந்த அரசும் இதுவரை மேற்கொள்ளாத மீன்பிடியாளர்களுக்கான வங்கிமுறை ஒன்றை நான் மந்திரியாக வந்த ஒன்றரை வருடத்திற்குள் அறிமுகம் செய்து வைத்துள்ளேன். இதன்மூலம் மீனவர்கள் பலன் பெறமுடியும்.

(6-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

ஒரு பரப்புக் காணியில் கல் வீடு கிணற்றுடன் பின்வரும் விலாசத்தில் உடனடியாக விற்பனைக்குண்டு. திரு. வே. சுப்பையா, சந்திரசேகரப் பிள்ளையார்கோவில் ஒழுங்கை, நல்லூர். 2461

புதிய லிஸ்ரர் 2½ டீசல் பம்ப்; J. K. 3 போட் கிருங் குப் நல்ல நிலைமையில் விற்பனைக்குண்டு 8-A, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். 2463

கூடுதல் பயன்தரக்கூடிய நல்ல இன செவ்விளநீர் தென்னங்கன்றுகள் விற்பனைக்குண்டு மில்க்வைற், யாழ்ப்பாணம். 2469

இறைச்சிக்குரிய கோழிகள் (BROILER) விற்பனைக்குண்டு விபரங்களுக்கு: குணபாம், இணுவில். 2471

1 சிறி தொடரிலக்கமுடைய BSA C12 மொடல் மோட்டார் சைக்கிள் ஈஸ்வரன் ஸ்ரோர்ஸ் உடுப்பிட்டி. 2470

### தேவை

வாகனங்களில் சென்று சோடா ஏற்றி, இறக்கி விற்பனை செய்யக்கூடிய விற்பனையாளர் தேவை ஸ்ரோரில் தங்கிக் கடமைபுரியக் கூடியவர் விரும்பத்தக்கது. நேரில் காணும் விலாசத்துக்கு நேரில் சமுகம் அளிக்கவும் ஆ.ச. சங்கரப்பிள்ளை & பிறதர், 162, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 2453

### வாடகைக்கு

யாழ். இந்துக்கல்லூரிக்கு அருகாமையில் சகல வசதியுடன் வீடு வாடகைக்கு உண்டு தொடர்பு கொள்ளவும்: நடராசா, நாவலர் வீதி, 13-ம் நம்பர், பிளவுஸ் அருகாமையில். 2459

### பயிற்சி

16-22 வயதுடைய இளைஞர்கட்கு ஒரு வருட விவசாயப் பயிற்சி 1979 ஆனி மாதம் முற்பகுதியில் ஆரம்பமாகும். ஊதியம்/ வேதனம் அடிப்படையில் இரண்டு நற்சாட்சிப் பத்திரங்கள் மற்றும் சான்றிதழ்களுடன் பெற்றோர்/ பராமரிப்பாளர் கடிதத்துடன் 26-5-79 க்கு முன்பு விண்ணப்பிக்கவும். அதிபர், விவசாய நிறுவனம், யாழ். க தொ. நு & வி. நி. மருதனாமடம் சுன்னாகம். 24[illegible]6


# தி. மு. க. பிரமுகர்கள் இலங்கையைவிட்டு வெளியேற்றப்பட்டனர்

## கூட்டணிக் கூட்டங்களில் பேசினராம்

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் உள்ளூராட்சி தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொண்டு உரையாற்றினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் தமிழ்நாடு தி. மு. க பிரமுகர்கள் இருவரும் இலங்கையிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

கொழும்பு சாணக்கிய நிதி பொதுப்பணி மன்றத்தின் அழைப்பின் பேரில் இலங்கை வந்திருந்த தி மு க பிரமுகர்களான திருவாளர்கள் பொன்னையா துரயமணி, ஈ. எம். நடராஜன் ஆகிய இருவருமே நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டனர்.

இலங்கை வெளி நாட்டு அமைச்சு இவர்களினது 'விசா'வை ரத்துச் செய்து உடனடியாக நாட்டை விட்டு வெளியேறுமாறு உத்தரவிட்டது.

இலங்கை-இந்திய தூதராலயம், பாதுகாப்பு அமைச்சின் உத்தரவை வளர்ஜிதம் செய்ததையடுத்து இருவரும் கடந்த வெள்ளிக்கிழமை கப்பல் மூலம் இந்தியா சென்றனர். [இ]

# ஈரான் மன்னருக்கு மெக்ஸிக்கோவில் மாளிகை

## 3 கோடி 50 லட்சம் டாலரில் அமைக்கப்படுகிறது

லண்டன், மே. 16

ஈரானிய இஸ்லாமிய புரட்சி அரசினால் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் ஈரான் மன்னர் ஷாவும் அவரது குடும்பத்தினரும் தங்குவதற்காக மெக்ஸிக்கோவில் 3 கோடி 50 லட்சம் டாலர் செலவில் பெரும் மாளிகை ஒன்று அமைக்கப்பட்டுவருகிறது.

ஒரு வாரத்தில் பூர்த்தியாகும் என எதிர்பார்க்கப்படும் இம்மாளிகையின் தளபாட வேலைகளைப் பிரபல ஐரோப்பிய சிற்பக் கலைஞர்கள் மேற்கொண்டுவருகின்றனர்.

மன்னர் ஷா இன்னும் ஒரு வாரத்தில் இம்மாளிகைக்கு வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது

"அரேபியன் நைட்" என்று அழைக்கப்படும் இந்த மாளிகை உலகின் சிறந்த ஆடம்பர மாளிகைகளில் ஒன்றாக இருக்கும் என்றும சொல்லப்படுகிறது

இதே வேளையில் "மன்னர் ஷா எங்கு சென்றாலும் கொலைகாரக் கட்டம் அவரை உலகெங்கும் தொடர்ந்து செல்லும்" என்று ஈரானிய அரசு விடுத்த எச்சரிக்கையையும் பொருட்படுத்தாத மெக்ஸிக்கோ அரசு, மெக்ஸிக்கோவுக்கு எவராவது வந்துபோக 'விசா' வழங்குகிறதே ஒழிய ஈரானிய அரசு அல்ல என்று தெரிவித்துள்ளது [கு]

## நாளைய போட்டி

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும், திருகோணமலை சென். ஜோசெப்ஸ் கல்லூரிக்குமிடையிலான உதைபந்தாட்டப் போட்டி ஒன்று நாளை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கின்றது. (கா)


WANTED

Female Hostel Staff cum Teacher Qualifications: G. C. E. Adv Level and/or Nursery Training. Female Hostel Staff cum Typist Qualifications: G. C. E (O/L.) with credits in English & Typing. Apply with copies of testimonials before 25-5-79. The Principal, Nuffield School for the Deaf & Blind, Kaitady. 2466

PERCIVAL HALL
8, Chapel St., Jaffna
A Seminar on
MANAGEMENT DEVELOPMENT
Leader: S. Ramanathan
C. A. (Eng. & Wales)
Director,
Special Projects
Singer International,
U. S. A
For benefit primarily of
I. C. M. A. Students
at 4-45 p. m.,
Friday, 18-5-79
2468


## தமிழ்க்காங்கிரஸ் வழக்கு

# மனுதார் சார்பிலான விண்ணப்பம் நிராகரிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ்க் காங்கிரஸ் வழக்கில் மனுதார் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தை நீதிபதி நிராகரித்தார்.

இவ்வழக்கு, யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி ஜே ஜி ஆசிர்வாதம் முன்னிலையில் நடைபெற்றது

2ம், 3ம் எதிர்மனுமதாரர்கள் காங்கிரஸிலிருந்து வெளியேறிவிட்டதால் அதுபற்றி சத்தியக்கூற்றோ சாட்சியமோ அளிக்க இடம்தருமாறு எதிர் மனுதாரின் சட்டத்தரணி எஸ் கதிரவேலுப்பிள்ளை விண்ணப்பித்திருந்தார். இதனை எதிர்மனுதாரின் சட்டத்தரணிகள் ஆட்சேபித்திருந்தனர்.

இந்த விண்ணப்பம் தொடர்பாக நேற்று [illegible] தீர்ப்பளிப்பதாக நீதிபதி தெரிவித்திருந்தார்.

இவ்வழக்கு விசாரணை முடிவடையும் கட்டத்திற்கு வந்துவிட்டதால், சத்தியக்கூற்றோ, சாட்சியமோ அளிக்கவேண்டியதில்லையென்று கூறி விண்ணப்பத்தை நிராகரித்த நீதிபதி மனுதார் சார்பில் மேலதிக சமர்ப்பணங்களை இம்மாதம் 30ம் தேதி சமர்ப்பிக்கலாம் என்று தெரிவித்தார். (க)

## 'தரப்படுத்தல்' என்ற போர்வையில்

# தமிழ் மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதி மறுப்பு

### மக்கள் விடுதலை முன்னணி கண்டனம்

(கொழும்பு)

"தரப்படுத்தல் என்ற பெயரில் தகுதியான பல தமிழ் மாணவர்கள் புறக்கணிக்கப்பட்டு பல்கலைக்கழக அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது!

"வடக்கிற்கு இராணுவத்தையும் பொலிஸையும் அனுப்பி அங்கு பதட்டநிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது

; தமிழ் மொழியை தேசிய மொழியாக அரசியலமைப்பின் ஏற்றுக்கொண்டிருந்தாலும் அரச நிருவாக மொழியாக சிங்களமொழிமட்டுமே ஏற்றுக்கொள்ளப்பட்டு அமுல்படுத்தப்படுகிறது.

கொம்பனிகளாரரிகளும், தனியார் துறையினரும் கொழும்பு மாநகர அபிவிருத்தித்திட்டங்களின் ஈடுபடுத்தப்பட்டு ஏழை மக்கள் சுரண்டப்படும் நிலை ஒன்று உருவாகிக் கொண்டிருக்கிறது இவற்றுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு பாட்டாளி மக்கள் தயாராகவேண்டும் அதற்காகவே உண்மையான புரட்சிகர பாட்டாளி வர்க்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் விடுதலை முன்னணி இந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிடுகிறது"

இவ்வாறு கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் போட்டியிடும் மக்கள் விடுதலை முன்னணி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஜனநாயக ஆட்சியை நடத்துவோம் என்று சொன்னவர்களாலேயே அடக்குமுறைச்சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மனித உரிமைகளைப் பறிக்கும் சட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன! தொழிற்சங்க உரிமைகளைப் பறிக்கும் தொழில் உறவு தொடர்பான வெள்ளை அறிக்கை, ஊழியர்சபைச் சட்டம் என்பன கொண்டு வரப்பட்டிருக்கின்றன நாம் ஆட்சிக்கு வரும் பட்சத்தில் இவற்றை எல்லாம் முடிவுக்குக் கொண்டுவருவோம் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [*]


சாவகச்சேரி இந்துக்கல்லூரி
பெற்றோர் - ஆசிரியர் சங்கம்
விசேட பொதுக்கூட்டம்
தலைவர்: திரு. பூ. வெற்றிவேலு
இடம்: சாவகச்சேரி இந்துக்கல்லூரி
காலம்: 25-5-'79 வெள்ளிக்கிழமை மாலை 3-45
நோக்கம்: பாடசாலை அபிவிருத்திச் சங்க அங்குரார்ப்பணம்
பெற்றோர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் யாவரும் சமுகம் தருப்படி அன்புடன் அழைக்கிறோம்
மு. கதிரேசு.
காரியதரிசி
2465


# இன்றைய பலன்

வைகாசி மாதம் 3-ம் நாள் வியாழக்கிழமை

(17-5-1979)

**மேஷம்:** வாகனச் சாரதிகளுக்கு இன்று சிறப்பான தினம், வரவிலும் திருப்தி காணப்படலாம். தாய்வழி மூலம் சிலருக்கு தனலாபமும் கிடைக்கும். அறிஞர்களின் தொடர்புகளும் ஏற்படலாம்.

**இடபம்:** குடும்பத்தில் சிறுபிணி தலைதூக்கும், இதன் மூலம் வைத்திய செலவுகளும் ஏற்படலாம். கடமையில் அதிக கவனஞ் செலுத்தவும்.

**மிதுனம்:** நெடும் பயணமொன்று மேற்கொள்ளப்படலாம் பொருள் கைநழுவ இடமுண்டு. வாகனச் சாரதிகள் அதிக கவனஞ் செலுத்தவும்.

**கடகம்:** காதலர்களுக்குக் கற்கண்டான தினம். குடும்பத்தில் குதூகலம் தென்படும். உறவினர்களின் ஆதரவும் பெற்றோரின் ஆசியும் தப்பாமல் கிட்டும்.

**சிங்கம்:** தென்றலும் தீயாக மாறும். குடும்பத்தில் அபிப்பிராய பேதங்கள் தோன்றலாம். உணவு விடயத்தில் கவனஞ் செலுத்தவும்.

**கன்னி:** உங்கள் நடவடிக்கையில் தனிச் சிறப்புத் தென்படும். பெரியவர் ஒருவர் உங்களுக்குக் கைகொடுத்து உதவுவார்.

**துலாம்:** வாழ்வுப் பாதையில் வளமான திருப்பங்கள் தென்படும் தொழில் துறையில் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், சிலர் வாழ்க்கையில் அரசினர் விருதிற்கும் இடமுண்டு.

**விருச்சிகம்:** பலவழிகளாலும் பண வரவிற்கும் இடமுண்டு பிள்ளைகள் மூலம் பெருமை தரும் சம்பவங்கள் இடம்பெறலாம். [illegible] வரவேற்க வேண்டிய நாள்.

**தனுசு:** [illegible] ஏமாற்றத்தின் தாக்குதல் உங்களுக்கு வேதனையைத் தரலாம். குடும்பத்திலும் சிறிய பூசல்கள் தலைதூக்கும். தனிவழிப் பயணத்தைத் தவிர்த்துக் கொள்ளவும்.

**மகரம்:** ஆசை அலைமோதும் வாழ்க்கையில் நிம்மதியற்ற நிலை தென்படும். ஆணவப் போக்கினால் பிறரைப் பகைத்துக் கொள்ள நேரிடும். மனவடக்கம் நன்று.

**கும்பம்:** பணவிஷயத்தில் திருப்தி காணப்படும். கணவன் மனைவி உறவுமுறைகள் மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும். சுபதினம்.

**மீனம்:** பேராசையின் மூலம் குறுக்குவழியை நாடுவீர்கள் மறைமுக எதிர்ப்புகளை சமாளிக்கவேண்டிய நிலை ஏற்படும். முன்னெச்சரிக்கை நன்று

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

# இஸ்ரேலை எதிர்த்து அரபுநாடுகள் வெளிநடப்பு

[மணிலா]

மணிலாவில் நடைபெறும் அன்டாட் மகாநாட்டிலிருந்து நாற்பது அரபுநாடுகளின் பிரதிநிதிகள் வெளிநடப்பு செய்தார்கள்.

இஸ்ரேலிய பிரதிநிதி மகாநாட்டில் பேசுவதற்கு எழுந்த பொழுதே அரபு நாடுகள் வெளிநடப்புச் செய்தன

இஸ்ரேலிய பிரதிநிதி பேச எழுந்தபோது எகிப்திய பிரதிநிதிகள் சபையில் இருக்கவில்லை

# நாளைமறுதினம் குட்டிப் 'பொதுத்தேர்தல்'

## 'யூ.என்.பி.யிடம் சலுகைகள் பெறுபவர் கூட்டணியினரே'

### சங்கத்தானை கூட்டத்தில் 'குமார்'

[சாவகச்சேரி]

"அறப்போர் மூலம், தமிழ் ஈழம் பெறுவோம் எனக் கூட்டணியினர் கூறுகின்றனர். ஆனால் மந்திரியை வரவேற்க வேண்டாமென்று தமிழ் இளைஞர்கள், யாழ்ப்பாணம் எம். பி. திரு. யோகேஸ்வரன் வீட்டு வாசலில் சத்தியாக்கிரகம் செய்தபோது, அறப்போருக்கு மதிப்பளியாது, இளைஞர்களின் தலைகளில் மிதித்துச் சென்று யாழ்ப்பாண எம் பி, அமைச்சர் லலித் அத்துலத் முதலியை வரவேற்றார். அறப்போருக்கு மதிப்பளியாதவர் அதுபற்றிப் பேசலாமா?"

மீசாலையில் நடந்த தமிழ்க் காங்கிரஸ் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிய தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினார். திரு. ப. செகராஜசேகரம் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில், திரு குமார் பொன்னம்பலம் மேலும் கூறியதாவது:-

"வலைவை ஆனந்தன், தம்பி முத்துக்குமாரசாமி, மற்றும் பல இளைஞர்கள் அமைச்சரை வரவேற்கவேண்டாம் என்று யாழ் எம். பியைக் கேட்டுக் கொண்டார்கள். எந்த இளைஞர்களின் முயற்சியால், பதவிக்கு வந்தாரோ, அந்த இளைஞர்களை உதாசீனம் செய்துவிட்டு அமைச்சரை வரவேற்றார். அறப்போருக்கு மதிப்பளியாதவர்கள் இன்று அதைப் பற்றிப் பேசுகிறார்கள். வடபகுதி யூ என் பி. ஏஜண்டுகள் யார் என்பதை மக்கள் அறியவேண்டும். கடந்த அரசு காலத்தில், கூட்டுறவுச் சங்கங்களில் பதவி வகித்தவர்கள், அரசின் கையாட்கள் எனக்கூறி கூட்டணியினர் எதிர்த்தனர். இன்று அதே கூட்டணியினர் வடபகுதி கூட்டுறவுச் சங்கங்களில் அமைச்சரினால் நியமனம் பெற்று பதவிவகிக்கிறார்கள். தமிழ்க்காங்கிரஸார் ஒருவராவது இப்படி பதவிவகிக்கிறார்களா? அதுமட்டுமல்ல, யூ என் பி. ஏஜண்டுகளாக, கூட்டணியைச் சேர்ந்த திரு. நேசையா, வங்கி இயக்குநர் குழுவிலும், திரு. நித்தியானந்தன், பலம்பொருள் அபிவிருத்திச்சபையிலும், திரு. ஆலாலசுந்தரம், வடபிராந்திய போக்குவரத்துச்சபையிலும் அமைச்சரினால் நியமிக்கப்பட்டுள்ளனர்."

சாவகச்சேரி காங்கிரஸ் இளைஞர் தலைவர் திரு. ஆர். ரி.

[5ம் பக்கம் பார்க்க]

## "வெளிநாடுகளில் தமிழர் நிலையை சொல்லாமல் வேறு எதைச் சொல்வது?"

### மீசாலையில் கூட்டணித் தலைவர்

[கொடிகாமம்]

"தமிழ்மக்களின் கஷ்டங்களை கூட்டணித் தலைவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று விரிவாக எடுத்துக் கூறுவதனால் தான், அமைச்சர்களுக்கு ஆத்திரம் வருகிறது எங்கள் கஷ்டங்களைப் பற்றிக் கூறுமல் வேறு எதைப் போய் வெளிநாடுகளில் கூறுவது"

மீசாலை பழைய புகையிரத நிலையத்திற்கு முன்பாக நடந்த தமிழர் விடுதலைக் கூட்டணி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிய கூட்டணி தலைவரும், நல்லூர் எம். பியுமான திரு. எம் சிவசிதம்பரம் மேற்கண்டவாறு கூறினார்.

ஆசிரியர் மயில்வாகனம் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில், திரு சிவசிதம்பரம் மேலும் கூறியதாவது:

"1977ம் ஆண்டு தேர்தலின் பின் இலங்கையில் அரசு தமிழ்பேசும் இனத்தைப் பல வழிகளாலும் தொல்லைப் படுத்தி வருகிறது இப்படியான ஐ தே கட்சியினருக்கா ஆதரவளிக்கப்போகிறீர்கள்? கடந்த தேர்தலில் பெற்ற தமிழ் மக்களின் ஏகோபித்த தீர்ப்பை முறியடிக்க அரசு செயல்பட்டுவருகிறது. இந்தியா, இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற பல நாட்டுத் தலைவர்களும் எங்கள் பிரச்சனையை உன்னிப்பாகக் கவனிக்கிறார்கள். இங்கு இனப்பிரச்சனை, பிரதேசப் பிரச்சனை, வேலைவாய்ப்பு போன்ற எந்த ஒரு பிரச்சனையும் கிடையாது என்பதை எடுத்துக்காட்டவே மாவட்ட அமைச்சர் திரு கனகரத்தினம், திரு. இராசதுரை போன்றவர்கள் விலைக்கு வாங்கப்பட்டுள்ளனர்.

"உலகிற்கு தமிழர்கள் இன்னும் ஒற்றுமைப்படவில்லை என்பதை எடுத்துக்காட்டவே வடக்கில் ஐ தே கட்சி போட்டி போடுகிறது. அவர் 10,000 வாக்குகளில் 500 வாக்குகள் ஐ தே கட்சி பெற்றால்போதும். தமிழ் மக்களில் சிலர் தமிழ் ஈழத்தை விரும்பவில்லையென்ற பிரச்சாரத்திற்கு!"

சாவகச்சேரி எம் பி திரு. வி என் நவரத்தினம் பேசுகையில் கூறியதாவது:

"தற்போதைய அரசாங்கத்தின் திட்டப்படி ஒரு தொகுதியை அபிவிருத்தி செய்வது பாராளுமன்ற உறுப்பினரின் அதிகாரத்தில் உண்டு. பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட மூலம் இதற்கான நிதியை ஒதுக்கமுடியும் எமது தொகுதியை உள்ளூராட்சிச்சபையின் வருமானத்திலிருந்து அபிவிருத்தி செய்யமுடியாது. எனவே அவற்றின் வருமானம் போதாது. பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டத்தின் மூலம் அபிவிருத்தி செய்ய, என்னோடு இணைந்து செயல்படக்கூடிய அங்கத்தவர்களின் கையில் நகரசபையை ஒப்படையுங்கள்" என்றார்.

யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் பேசுகையில் கூறியதாவது:

"இன்று கூட்டணியுடன் போட்டிபோடும் ஐ. தே கட்சி அபேட்சகர்கள், இனப்பற்றோ, நாட்டுப்பற்றோ, கொள்கைப்பற்றோ அற்றவர்கள் முன்னர் சுதந்திரக் கட்சி அரசாங்கத்தில் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த தினத்தில் முனியப்பர்கோவில் வாசலில் கஞ்சி ஊற்றியவர்கள் இன்று தங்கள் விடுகளுக்கு கஞ்சி வார்க்கும் நோக்குடன் ஐ தே கட்சியில் சேர்ந்து உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுகிறார்கள்"

கிளிநொச்சி எம் பி திரு வி ஆனந்தசங்கரி பேசுகையில் கூறியதாவது:

"தமிழ்மக்கள் தமது இறைமையை இழந்து 400 வருடங்களாகிறது எமது சுதந்திரத்தை 2 நாட்களில் பெற்றுவிடமுடியாது. தமிழ் ஈழத்தை நாம் போராட்டத்தின் பின் பல தியாகங்களைச் செய்தே அமைக்கமுடியும். [ச]

## மக்கள் கருத்து

### மூளாய் கூட்டுறவு ஆஸ்பத்திரி அபிவிருத்திக்கு உதவுக

தொல்புரம், மூளாய், சுழிபுரம் முதலிய கிராமங்களிலிருக்கும் சில பெரியவர்கள், மலேசியா, சிங்கப்பூர் முதலிய பிற நாடுகளுக்குச் சென்று பொருளீட்டி வந்து மேற்படி வைத்தியசாலையைப் பொதுமக்களின் நன்மையைக் கருதி அமைக்க முன்வந்தார்கள். இதைக் கண்ணுற்ற ஏனைய பொதுமக்களும் கனவான்களும் அதற்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கத் தாமாக முன்வந்து பொருளுதவிபுரிந்து சிறிது சிறிதாகப் பல கட்டிடங்களைக் கட்டியெழுப்பினார்கள். சிறிது காலத்தில் இது ஒரு பெரிய வைத்தியசாலையாக வந்து ஆயிரக்கணக்கான மக்களுக்குச் சேவையாற்றக்கூடியதாகவந்தது மிகத்திறமையான வைத்திய நிபுணர்கள் இங்கு கடமையாற்றினர். நாட்டின் பல பாகங்களிலிருந்தும் நோயாளிகள் வந்து குவிந்த வண்ணமிருந்தனர். இவ்வைத்தியசாலையின் திறமையையும் நற்சேவையையும் நாடுமுழுவதும் அறியத் தொடங்கியது. உவார்ட்களில் தங்கியிருந்து சிகிச்சை பெறமுடியாமல்; இடமில்லாத சூழ்நிலை கூடப் பல சந்தர்ப்பங்களில் ஏற்பட்டது.

இலங்கைச் சரித்திரத்தில் அழியாப் புகழை நிலை நாட்டிய இந்தத் தாபனம் இன்று மிகக் கேவலமான அவல நிலையை அடைந்துள்ளது.

எமது கிராமத்திலும் சுற்றுக் கிராமங்களிலும் பல பணம் படைத்த பெரியோர்களும் மற்றும் மலேயா, சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளில் தொழில் புரிந்து இளைப்பாறி வந்துள்ள கனவான்களும் அநேகமானோர் இருக்கின்றனர்.

தற்போது சில பெரியார்கள் மேற்படி வைத்தியசாலையைப் புனர் நிர்மாணம் செய்து இழந்த புகழையும் சேவைகளையும் திரும்பவும் கிடைக்கக் கூடிய வகையிலன்றி மேன்மேலும் அதன் புகழையும் சேவைகளையும் அதிகரிக்கச் செய்வதற்கு ஆவவேண்டிய முயற்சிகளை எடுத்து வருகிறார்கள். எனவே எல்லோரும் ஒன்று கூடி ஒற்றுமையுடனும் மிகுந்த ஆர்வத்துடனும இந்தப் பெரும்பணியைச் செய்து முடிக்க தங்களால் இயன்ற உதவிகளைப் புரியுமாறு தயவாகக் கேட்டுக்கொள்கிறேன்

**அ. விநாயகமூர்த்தி**
33 ம் ஒழுங்கை
வெள்ளவத்தை

## 'பொதுத்தேர்தலிலும் வடக்கில்போட்டியிடுவோம்'

### சாவகச்சேரியில் அமைச்சர் ரனில்

[மட்டுவில்]

"வேலைவங்கிப் படிவங்களை இனிமேல் கூட்டணி எம். பிக்களுக்கு வழங்கமாட்டோம். வங்கிப்படிவங்களை, சரியான முறையில் விநியோகிப்பார்கள் என நம்பினோம். அரசின் புதிய யாப்பை ஆதரித்தவர்களுக்கு வங்கிப்படிவங்கள் கிடைக்கவில்லை. அதனை எதிர்த்த இளைஞர்களுக்கே வங்கிப்படிவங்கள் கிடைத்துள்ளன. ஆதலால் இனி மேல் நாங்களே நேரடியாக வழங்குவோம்."

சாவகச்சேரி ஐக்கிய தேசியக் கட்சி கிளையில் நடந்த கூட்டத்தில் பேசிய இளைஞர் வேலைவாய்ப்பு அமைச்சர் திரு ரனில் விக்கிரமசிங்கா மேற்கண்டவாறு கூறினார். அமைச்சர்களான ரனில் விக்கிரமசிங்கா, பெஸ்டஸ் பெரேரா ஆகியோர் வேம்படி சந்தியிலிருந்து ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

அமைச்சர் ரனில் விக்கிரமசிங்கா மேலும் கூறியதாவது: "நாங்கள் பொய் வாக்குறுதிகளைக்கூறி உங்களை ஏமாற்றி வாக்குப் பெற்றுவிட்டு செல்லவரவில்லை. ஏனெனில் அடுத்த பொதுத் தேர்தலிலும் வடக்கில் நாங்கள் போட்டியிடவிருக்கிறோம், ஆதலால் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு நாம் பொய் வாக்குறுதிகளை தந்து விட்டு, அதனை நிறைவேற்றாமல் மீண்டும் பொதுத்தேர்தல் பிரசாரத்திற்கு உங்கள் முன்னிலையில் வரமுடியாது.

"இளைஞர் மத்தியில் வேலையில்லாப் பிரச்சனைகாரணமாகத்தான் இங்கு புலிப்படை உருவாகத்து. இங்குள்ள இளைஞர்கள் காங்கேசன்துறை தொழிற்சாலையில் வேலைபெற விரும்புகிறார்கள். இளைஞர்கள் விவசாயம், கைத்தொழில் வர்த்தகம் மற்றும் சகல துறைகளிலும் வேலைபெற வேண்டும் எந்தெந்தப் பகுதிக்கு என்னென்ன வேலை வேண்டுமோ அவற்றை செயல்படுத்த வழங்குவோம். நுவரெலியாவில் செய்யும் வேலையை இங்கு செய்ய முடியாது. இப்பகுதிக் ஏற்ற வேலையையே செய்ய வேண்டும்"

மீன்பிடித்துறை அமைச்சர் திரு பெஸ்டஸ் பெரேரா கூறியதாவது "எங்கள் தலைவர் ஜே ஆர் நாட்டின் சகலபகுதிகளும் அபிவிருத்தி அடைய வேண்டும் என விரும்புகிறார். வளங்கொழிக்கும் கடல் வட பகுதியில் உண்டு இத்துறையை அபிவிருத்தி செய்து பெருந்தொகையான மக்களுக்கு வாழ்வளிப்போம். வடக்கின் விவசாய அபிவிருத்தியில் அக்கறை எடுப்போம். இதற்கு உங்கள் ஒத்துழைப்புத்தேவை இத்தேர்தல் மூலம் உங்கள் ஒத்துழைப்பைக் காட்டுங்கள்"

## "தமிழ்நாடு நிலைக்கு நாம் ஏன் வந்தோம்?"

### கா. பொ. தரும் விளக்கம்

[யாழ்ப்பாணம்]

"சட்டமறுப்பு செய்தபோது நாம் சிறைக்குட்போவதற்கோ, அன்றிசொத்துக்களை இழக்கவோ தயாராக இருந்தோம். எங்களுக்காக வழக்கில் வாதாட ஜி. ஜி. பொன்னம்பலம் வருவார். எங்களைக் காப்பாற்றுவார் என நம்பி நாம் சட்டமறுப்பில் இறங்கவில்லை. அமரர் ஜி. ஜி எங்களுடைய வழக்கை வாதாடி உலகப் புகழ்பெற்றார். இதற்காக குமார் எமக்கு நன்றி கூறவேண்டும்."

நாச்சிமார் கோவிலடியில் நடந்த தமிழர் விடுதலைக் கூட்டணி தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் பேசிய ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா பொ இரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. தம்பு தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது:

"தமிழர் மத்தியில் காட்டிக் கொடுப்பவர்கள் இருக்கிறார்கள். இவர்களைக் களை எடுத்த பின்தான் சுதந்திரப் போர் ஆரம்பிக்கவேண்டும்.

"அமைச்சர் ஜனப் முகமத் ஒரு சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர். அவர் மந்திரியாக இருந்தாலும், எங்கள் பஸ் சேவையை அபிவிருத்திசெய்ய முடியாது யாழ்ப்பாணத்திற்கு 100 பஸ்களை வாதாடிப் பெறுவோம் கிளிநொச்சிக்கு ஓடிய பஸ் இன்று முஸ்லிம் வட்டாரத்திற்கு திசை திருப்பப்பட்டுள்ளது இதைத்தான் அமைச்சர் முகமத் செய்தார். புதிய பஸ்ஸை தரவில்லை வட்டமேசை மாநாட்டாலும் வேறு எதாலும் தமிழன் பிரச்சனையைத் தீர்க்கமுடியாது. அதனால்தான் தனித் தமிழ் நாடு என்ற நிலைக்கு வந்துள்ளோம்."

யாழ். எம். பி திரு வெ. யோகேஸ்வரன் கூறியதாவது:

யாழ். தொகுதி யூ என். பி. பிக்கு நல்லபாடத்தை கொடுக்கும்! அமைச்சர் ஜனப்முகமத் 30பேரை தெரிவு செய்யுமாறு என்னிடம் கூறியதாகவும் அதில் சிறுபான்மைத் தமிழர் ஒருவருமில்லையென்றும் கூறினார். உண்மையில் அதில் ஒருவருக்காவது வேலை வழங்க எனக்கு அனுமதி கிடைக்கவில்லை."

கிளிநொச்சி எம். பி திரு. வி. ஆனந்தசங்கரி கூறியதாவது: "அமரர் ஜி ஜி பொன்னம்பலம் கூட்டணிமேடைக்கு வரவில்லை. நாம் அவரை அழைக்கவில்லை அவர் தலைவர் பதவி ஏற்கச் சம்மதம் தெரிவித்தபின் தான் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். அதன்பின் தான் நாமும் கூட்டணியில் சேர்ந்தோம். தம்பி குமார் அப்போது சின்னப் பொடியன் அதனால் அவருக்கு ஒன்றும் தெரியாது. ஜி ஜி ஒருபோதும் கூட்டணியை எதிர்க்கவில்லை

"குமார் 77ம் ஆண்டு வாய் மூடிக்கொண்டிருந்தால், கட்டாயமாக யாழ்ப்பாணத் தொகுதி குமாருக்கு கிடைத்திருக்கும் அதையும் இழந்த பரந்தன் இரசாயன தொழிற்சாலையை மூடப்போகிறார் என்பதனால்தான் நானும் வட்டு. எம். பி. யும் யூ. என் பி அமைப்பாளர் திரு கணேசலிங்கத்துடன் சென்று அமைச்சர் சிறில்மத்யூவை சந்தித்து அதனைத் தடுத்தோம்".

திரு. ஏ. துரைராஜசிங்கம், திரு. என். ரி. செல்லத்துரை மற்றும் பலர் பேசினார்கள்

[கௌ]

யாழ்ப்பாணத்தில்

## டென்மார்க் பீற்றூட் விதைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மிகக் கூடுதலான விளைச்சலைக் கொடுக்கும் டென்மார்க் பீற்றூட் விதைகளைப் பெருமளவில் இறக்குமதிசெய்து விற்பனை செய்வதற்கு அரசு தனியார் துறையினருக்கு அனுமதி வழங்கியுளது

இவ்விதைகள் இன்னும் இரு வாரங்களில் இறக்குமதியாகவுள்ளது. மாரிப்போகச் செய்கைக்கு இது உகந்தது

யாழ்ப்பாணத்தில் இவ் விதைகளை தனியார் நிறுவனமான சமுத்திரா ட்றேட்ஸ் லிமிட்டெட் விநியோகம்செய்யும். [செ]

# புதுடில்லியில் எம். ஜி. ஆர். ஊர்வலம் நடத்துவார்

## சகல கட்சித்தலைவர்களுக்கும் அழைப்பு

சென்னை, மே 16 தமிழ்நாடு முதல் அமைச்சர் திரு. எம். ஜி இராமச்சந்திரன் நெல்லுக்குலாபகரமான விலைகோரி புதுடில்லியில் சர்வ கட்சி ஊர்வலம் ஒன்றை நடத்த தீர்மானித்துள்ளார்.

புதுடில்லியில் ஊர்வலம் ஒன்றை நடத்தி பிரதமர், ஜனாதிபதி துணைப்பிரதமர்கள் ஆகியோரிடம் நெல்லின் விலை குறித்த மகஜர் ஒன்றை சமர்ப்பிப்பதென்றும் திரு. இராமச்சந்திரன் முடிவுசெய்துள்ளார்.

இத்தகவலை திரு. இராமச்சந்திரனே பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

விரைவில் புதுடில்லியில் நடைபெற இருக்கும் ஊர்வலத்தில் கலந்துகொள்ளுமாறு தமிழக சட்ட சபை உறுப்பினர்கள் சகலருக்கும் தமிழ்நாடு கட்சித்தலைவர்களுக்கும் தாம் அழைப்புவிடுக்க இருப்பதாகவும் திரு. இராமச்சந்திரன் தெரிவித்தார்.

ஏனைய கட்சித்தலைவர்களோ சட்டசபை உறுப்பினர்களோ உத்தேச ஊர்வலத்தில் கலந்து கொள்ளமறுக்கும் பட்சத்தில் அ இ அ தி மு க சட்டசபை உறுப்பினர்களும் எம் பி க்களும் ஊர்வலம் நடத்தி மகஜர் சமர்ப்பிப்பார்கள் என்றும் திரு. எம். ஜி. ஆர். தெரிவித்தார். [இ]

---

## புங்குடுதிவுக்கு குடிநீர் வழங்க கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

புங்குடுதிவில் முன்னைய ஆண்டுகளைப்போல் இந்த ஆண்டும் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டிருந்தேன். பல நாட்களாகியும் குடி நீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவே புங்குடுதிவுக்கு குடிநீர் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கும் பொருட்டு யாழ். அரசாங்க அதிபருக்கு உடன் தேவையான பணத்தை அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு கோரும் அவசரத் தந்தியை ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் சமூகசேவை அமைச்சர் திரு. அசோகாகருணரத்தினவுக்கும் சமூக சேவைகள் திணைக்கள அபிவிருத்திக்கும் அனுப்பியுள்ளார். [இ]

---

## முருகவேள் இடமாற்றம்

[யாழ்ப்பாணம்]

சாவகச்சேரி உதவிஅரசாங்க அதிபர் திரு எஸ் முருகவேள் நேற்று முன்தினம் கொழும்பிற்கு திடீர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

யாழ். கச்சேரி பொதுசனத் தொடர்பு அதிகாரி திரு எஸ் சண்முகசுந்தரம் சாவகச்சேரி பதில் உதவிஅரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். [ஈ-அ]

---

## அமிரைக் கவர்ந்த பேரிந்துக்குலை

(பண்டத்தரிப்பு)

காங்கேசன் துறைத் தொகுதி இளைஞர் விவசாயக் கழகங்களின் ஆண்டுவிழாவும் பொருட்காட்சியும் அண்மையில் அளவெட்டி மகாஜனசபை மண்டபத்தில் நடைபெற்றபோது பொருட்காட்சியில் வைக்கப்பட்டிருந்த பேரீந்துக் குலை ஒன்று அவ்விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட எதிர்க் கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்தை பெரிதும் கவர்ந்தது.

"அரேபிய நாடுகளில் நன்றாக செழித்து வளரும் பேரீந்து இங்கும் நன்றாக வளருமா? என்று ஆச்சரியத்துடன் கேட்டார், திரு. அமிர்தலிங்கம் காங்கேசன் துறையிலுள்ள மைலிட்டியில் மைலிட்டி இளைஞர் விவசாயக்கழகத் தலைவர் திரு. சு. ரவீந்திரகுமாரின் தோட்டத்தில் இந்தப் பேரீந்துமரம் செழித்து வளர்ந்து குலைபோட்டுள்ளது என்பதை தெரிந்துகொண்ட திரு. அமிர்தலிங்கம் அவரைப் பாராட்டினார்.

---

## ரஷ்ய - அமெரிக்க ஒப்பந்தத்தை செனட்சபை நிராகரித்தால்

# உலக சமாதானத்திற்கு அச்சுறுத்தலாக அமையும்

## யு. எஸ். அமைச்சர்கள் கருத்து

வாஷிங்டன், மே 16 அமெரிக்க - ரஷ்ய கேந்திர ஆயுதக் கட்டுப்பாட்டு ஒப்பந்தத்தை அமெரிக்க செனட் சபை அங்கீகரிக்காவிடின் உலக சமாதானத்திற்கு அது ஒரு மோசமான அச்சுறுத்தலாக இருக்கும்.

இவ்வாறு அமெரிக்க வெளிநாட்டமைச்சர் திரு வான்ஸ், பாதுகாப்பு அமைச்சர் திரு ஹரோல்ட் பிரெளண் ஆகியோர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

உத்தேச ஒப்பந்தம் கைச்சாத்திடப்படாவிட்டால் அது இன்னும் ஒரு அணு ஆயுத போட்டா போட்டிக்கு வித்திடும் என்றும் அமெரிக்க-ரஷ்ய உறவும் உலக நாடுகளுடனான அமெரிக்க உறவும் பெரிதும் பாதிக்கும் என்றும் அவர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

உத்தேச ஒப்பந்தத்தில் அமெரிக்க அதிபர் திரு ஜிம்மி கார்ட்டரும் சோவியத் அதிபர் திரு பிரஷ்னேவும் ஜூன் மாதம் 15 ம் திகதி கைச்சாத்திடுவர். [இ]

---

## அலங்கார உற்சவம்

[யாழ்ப்பாணம்]

புங்குடுதீவு கிழக்கு வீரமலை ஸ்ரீ முருகமூர்த்தி கோவில் வருடாந்த அலங்கார உற்சவம் இன்று நடைபெறுகிறது

இன்றுபகல் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் சொற்பொழிவும், சிதம்பரம் எஸ். மீனாட்சிசுந்தரம் குழுவினரின் மெல்லிசை விருந்தும், எஸ். எஸ். கணேசபிள்ளை குழுவினரின் 'யார் அவன்'. நகைச்சுவை நாடகமும் மற்றும் மேளக்கச்சேரி, நகைச்சுவைக் கதம்பம் ஆகியனவும் நடைபெறவிருக்கின்றன.

---

## அபிவிருத்திச்சபை பொறுப்பேற்றது

[யாழ்ப்பாணம்]

வட்டுத்தொகுதி அபிவிருத்திச் சபையின் போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலையைப் பனம்பொருள் அபிவிருத்திச் சபைபொறுப்பேற்றுள்ளது.

சங்கானை உதவி அரசாங்க அதிபரின் கீழ் இயங்கிவந்த இந்தத் தொழிற்சாலையைப் பனம்பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. கே. சி. நித்தியானந்தா நேரில்சென்று பொறுப்பேற்றார்.

கருப்பட்டி, ஜாம் போத்தல் கள் இருமடங்கு உற்பத்தியாகுமென்று தொழிற்சாலை உற்பத்தி அதிபர் திரு. இ. ரவுடேந்திரன் தெரிவித்தார். [க-அ]

---

# ஆங்கிலத்தின் அவசியத்தை வலியுறுத்துகிறார் வட்டு. எம்பி.

[சித்தங்கேணி]

"நமது மாணவர்கள் மிகத் திறமையாக பரீட்சைகளில் சித்தியடைந்தாலும் சர்வகலாசாலைக்குச் செல்ல முடியாமல் இருக்கின்றார்கள். சிங்கள மாணவர்கள் நான்கு பாடங்களில் சாதாரண சித்தியைப் பெற்று மருத்துவ பொறியியல் பீடங்களுக்கு தெரிவு செய்யப்படுகின்றனர். இதேவேளையில் தமிழ் மாணவன் நான்கு பாடங்களிலும் திறமைச் சித்தி பெற்றும் சர்வகலாசாலைக்கு எந்த ஒரு பயிற்சிக்கும் தெரிவு செய்யப்படுவதில்லை ஆங்கிலத்தை நன்றாகப்படித்தால்தான் வெளிநாடுகளுக்காவது சென்று கல்வியில் முன்னேற்றமடையலாம்"

இவ்வாறு வட்டுக்கோட்டை கலாநிலையத்தின் 17 வது ஆண்டுவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய வட்டுக் கோட்டை எம் பி. திரு. கா திருநாவுக்கரசு குறிப்பிட்டார்.

கலா நிலைய உயர்கல்விக்கழக அதிபர் திரு க. கயிலாயநாதன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு கா திருநாவுக்கரசு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

வெளிநாடுகளுக்கு வேலைக்கு போவதற்கு ஆங்கிலம் மிக முக்கியமானதாகும். ஆங்கிலத்தில் நல்ல தகுதியுடையவர்களையே இங்குள்ள கம்பனிகள் சிபார்சு செய்து வெளிநாடுகளுக்கு வேலைக்கு அனுப்பி வைக்கின்றன

இன்றைய அரசாங்கத்துக்கு திட்டவட்டமான கொள்கை எதுவும் கிடையாது இதனால் ஆசிரியர்களை அடிக்கடி இடமாற்றம் செய்து மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தை தடைசெய்கின்றது.

அடுத்த மாதம் முதல் வட்டுக்கோட்டைத் தொகுதியில் இருந்து மட்டும் சுமார் 35 விஞ்ஞானப்பட்டதாரி ஆசிரியர்கள் தென் இலங்கைக்கு மாற்றலாகி செல்கின்றனர், இவ்வாறு யாழ் மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலிருந்தும் ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இதைநாம் வன்மையாக எதிர்த்து வருகின்றோம் ஆகஸ்டில் நடைபெற உள்ள க பொ த [உயர்தர] பரீட்சைக்கு முன்னர் ஆசிரியர்களை இடமாற்றம் செய்து எமது மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தை தடைசெய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

சுமார் 250 வருடங்களாக தமிழர்கள் கல்வியொன்றிலேயே முன்னேற்றமடைந்து வந்தார்கள். அதற்கும் இந்த அரசாங்கம் பலவழிகளிலும் முட்டுக்கட்டை போடுகின்றது பெற்றோர்களாகிய நீங்கள் உங்களுடைய பிள்ளைகளின் கல்வியில் அக்கறையாக இருந்து பாடசாலை ஆசிரியர்களுக்கும் அதிபர்களுக்கும் ஒத்துழைப்புக் கொடுத்து உங்களுடைய பிள்ளைகளின் குறைகளைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

இவ்விழாவில் 'பிரத்தியேக கல்வியூட்டும் நிலையங்களால் பள்ளிமாணவருக்குத் தீமைகளைவிட நன்மைகளே அதிகம்' என்ற பொருளில் வழக்காடு மன்றம் நிலைய மாணவர்களால் நடாத்தப்பட்டது. இவ்விழாவில் வட்டுக்கோட்டைத் தொகுதிரீதியாக நடைபெற்ற ஆங்கில சங்கீத போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு திருமதி கலைமகள் திருநாவுக்கரசு பரிசு வழங்கினார். நிலைய மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

(இ)



Rio (Jaffna) Phone: 7617
Daily 10-30, 4-45, 7-00 & 9-30 p.m
Jim Brown in
SLAUGHTERS BIG RIP OFF
(Adults only)

நாகமஸ்
[சுன்னாகம்]
தினசரி 6-30 9-45
சனி, ஞாயிறு 2-30
தேங்காய்சீனிவாசன்
சௌகார் ஜானகி
அன்பின் அலைகள்

20-வது வாரம்
வின்சர் (யாழ்ப்பாணம்)
போன்: 466
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-00, 6-00, & 9-30
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

ராஜா (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். — ஜெயலலிதா, சௌகார்ஜானகி நடித்த
ஒளிவிளக்கு
ஈஸ்ட்மன் கலர்
புதிய பிரதி

ஜனத்திரள் அலைமோதும்
2-வது வெற்றி வாரம்
சாந்தி (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
— இப்பொழுது காண்பிக்கப்படுகிறது —
இராஜேந்திர குமார் — இரட்டைவேடம் —
ஹேமமாலினி—பானுரேகா—மற்றும் பலர்
இசை: லக்ஷ்மிகாந்த் பியரேலால்
இனிய இசை, குதிரை ஓட்டங்கள், விறுவிறுப்பு மிகு சண்டைகள்.
லட்சக்கணக்கான ரூபாய் செலவில் தயாரிக்கப்பட்ட பிரமாண்டமான படைப்பு.
“கோரா அவுர் காலா”
ஹிந்தி ஈஸ்ட்மன் வண்ணத் திரையோவியம்.

REGAL (Jaffna) Daily 4-30, 7-00 & 9-10 p.m. only
PERCY'S PROGRESS
(Color) (Adults Only)
வயது வந்தவர்களுக்கு மட்டும்

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30 2-30, 6-15, 9-30
THE TOWERING INFERNO
த டவரிங் இன்பேர்னோ

ராணி (யாழ். நகர்)
இன்று மட்டும்
ஜெமினி - சரோஜாதேவி - ரங்கராவ்
குலவிளக்கு (புதிய பிரதி)
18-5-79 முதல்
எங்களில் ஒருவன்

தினசரி 4 காட்சிகள்
மனோகரா (யாழ்நகர்)
காந்தராவ் - மாலினி வரலக்ஷ்மி நடித்த
ஜெய்பவானி
[புதிய பிரதி]
பயங்கரச் சண்டைகள், மாயாஜால வித்தைகள் நிறைந்தது
21-5-79 முதல்
கோமாதா என் குலமாதா

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி, 2-30, 6-30 & 9-45
சனி, ஞாயிறு 10-30, 2-30, 6-30 & 9-45
ராஜசுலோஜனா - எம். ஆர். ராதா
கவிதா
(புதிய பிரதி)

லிடோ (யாழ். நகர்)
போன்: 7698
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி—பத்மினி
வியட்நாம் வீடு

# “வட்டமேசை மாநாட்டை அரசு தட்டிக்கழிப்பது ஏன்?

## கம்யூனிஸ்ட் பிரசாரக் கூட்டத்தில் கேள்வி

[யாழ்ப்பாணம்]

“கம்யூனிஸ்டுகளைப் பொறுத்தவரை இந்த அரசோ அல்லது சுதந்திரக்கட்சியினரோ தமிழ்மக்களின் அடிப்படைப் பிரச்னைகளைத் தீர்க்கமாட்டார்கள். அதனை தீர்த்து வைப்பதற்கு எவ்வித திட்டமும் இவர்களிடம் இல்லை”

நல்லூர் கியானை மண்டபத்தில் நடந்த கம்யூனிஸ்ட் கட்சிப் பிரசாரக் கூட்டத்தில் திரு பீட்டர் ஜெயசேகரா மேற்கண்டவாறு கூறினார்.

திரு கோ பொன்னுத்துரை தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு ஜெயசேகரா மேலும் கூறியதாவது:

“அண்மையில் பத்திரிகைகளில் இனவாதத்தைத் தூண்டுவோர் கைது செய்யப்படுவார்கள் எனச் செய்திகள் வந்தன. ராணி வீதியிலிருந்து வெளிவரும் மறைமுகமான இனவெறிப் பிரசாரங்களுக்கு எதிராகவும் மந்திரிசபையில் அமைச்சர்களாக இருக்கும் திரு சிறில் மத்தியூ, திரு அத்துலத்முதலி போன்றோரின் இனவெறிப் பிரசாரத்துக்கு எதிராக இந்த உத்தேச சட்டம் பாவிக்கப்படுமா? இக் குறிப்பிட்ட அதிகாரிகள் இச் சட்டத்தின்கீழ் தண்டிக்கப்படுவார்களா?

“முதன்முதல் இந்த நடவடிக்கையை அரசு எடுக்குமென்றால், இப்பாரபட்சமற்ற அரசு என்றும் தார்மீக அரசென்றும் தயாராகநாம் ஏற்கத் இருக்கிறோம்.

“எந்த அரசுக்கும் கிடைக்காத பேலதிக ஆசனங்களைப் பெற்று யூ என் பி பதவிக்கு வந்துள்ளது இந்த அதிகாரத்தைக்கொண்டு நினைத்த நேரத்தில் தமது வசதிக்காகப் பாரபட்சமுள்ள முறையில் திருத்திக்கொள்ளவும் தமக்கு எதிராக உள்ளவர்களை அடக்கி ஆள்வதற்கு நினைத்த சட்டங்களை உருவாக்கியும் வருகின்றனர்.

“தொழிற்சங்க உரிமைகளைப் பறித்து எடுக்கின்றனர் பொதுத்தேர்தலில் கொடுத்த வாக்குறுதிகளைத் தட்டிக் கழிக்கின்றனர். இவர்களின் வாக்குறுதிகளில் ஒன்றான வட்டமேசை மாநாடு மூலம் தமிழர் பிரச்னையைத் தீர்ப்பதாகும். இதனை இன்றுவரை அரசு தட்டிக்கழித்து வந்ததேன்?

“யூ எம் பியிலும் சரி, சுதந்திரக்கட்சியிலும் சரி, தமிழர் நம்பிக்கை வைத்திருப்பது தமிழ்மக்களை மேலும் படுகுழியில் தள்ளிவிடுவதாகும்.

இந்தநாட்டுத் தமிழ் மக்களின் தேசிய பிரச்னைக்குத் தீர்வு காணும் வகையில் தெட்டத்தெளிவான ஒரு திட்டத்தை முதன்முதலில் இந்நாட்டில் முன்வைத்த ஒரே ஒரு தேசியக்கட்சி கம்யூனிஸ்ட் கட்சியாகும்.

அன்று தொட்டு இன்று வரை வடக்கு—கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக அங்கீகரித்து இனத்தின் சுயநிர்ணய உரிமை வழங்கப்படவேண்டும் என்றும் இந்த சுயநிர்ணய உரிமையைப் பாவிக்கும் வகையில், தமிழ் மக்கள், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பிரதேச சுயாட்சிகளை அமைத்துக் கொள்வதே அவர்களுக்கு மிகக் கூடிய நன்மையைக் கொடுக்கும் என்றும் கூறிவந்துள்ளோம்.

இக்கொள்கையை முன் வைத்துத்தான் இலங்கையில் கிடைக்கும் சந்தர்ப்பங்களில் எல்லாம் சிங்கள மக்கள் மத்தியில் பிரசாரம் செய்து வருகின்றோம். எனவே உள்ளூராட்சித் தேர்தலையும் போராட்டத்தின் ஒரு முன்னோடியாகக் கணித்து கம்யூனிஸ்ட்டுக்கு ஆதரவளிக்கத் தமிழ் மக்கள் முன்வர வேண்டும் என்று நாம் கேட்டுக்கொள்கிறோம். (கொ-க)

## ஏழாலை வடக்கு

### மின்னொளியில் இன்றைய கரபந்தாட்டம்

[தெல்லிப்பழை]

ஏழாலை வடக்கு கலாநிதி சனசமூகநிலையத்தின் கலாநிதி விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் 5ம் நாள் போட்டியிலும் கழகங்கள் இன்று மோதுகின்றன.

6 வீரர் போட்டியில் உதயதாரகை ‘ஏ’யுடன் விநாயகர் ‘ஏ’யும், கலைமதி ‘பி’யுடன் ஐக்கிய ‘பி’யும் உதயதாரகை ‘பி’யுடன் விநாயகர் ‘பி’யும் இராம மூ. க. வுடன் பூமகள் வி கவும் மோதவிருக்கின்றன.

4 வீரர் போட்டியில் ஐக்கிய ‘பி’யுடன் இளங்கோவும் கலைவாணி ‘பி’யுடன் உதயதாரகை ‘பி’யும் மோதுகின்றன.

## யூ. என். பி. ...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சுப்பிரமணியம் கூறியதாவது:-

“1947 ம் ஆண்டு அமரர் ஜி ஜி பொன்னம்பலம் தலைமையில், தமிழ்க்காங்கிரஸார் வடக்கிலிருந்து யானையை விரட்டியடித்தனர். 30 வருடத்திற்குப்பின் நாங்கள் பெற்ற சலுகைகளுக்கு கைம்மாறாக திரு, அமிர்தலிங்கம் தலைமையில் கூட்டணியினர் யானையை வடக்கிற்கு வரவழைத்துள்ளனர்.

டாக்டர் ஏ. எல். ஏபிரகாம் பேசுகையில் கூறியதாவது:-

“கூட்டணியில் சேருவதானால் விண்ணப்பம் நிரப்பித்தான் சேரவேண்டும். அமரர் ஜி ஜி கூட்டணியில் சேர்ந்திருந்தால், அந்த விண்ணப்பத்தை கூட்டணியினர் பகிரங்கமாகக் காட்டுவார்களா? தங்கள் மேடையில் அமரர் ஜி ஜி தோன்றுவார் என்று எத்தனையோ தடவை கூட்டணியினர் பிரசாரம் செய்தனர். ஒருநாளாவது ஜி ஜி அவர்கள் மேடையில் தோன்றவில்லை.” (ஈ)

வெஸ்லி
[சாவகச்சேரி]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
எம்.ஜி ஆர் -ராதாசலூஜா
இதயக்கனி

# “யாழ். நகரை அபிவிருத்தி செய்ய ஐ.தே. கவுக்கு ஒரு சந்தர்ப்பம் அளியுங்கள்”

[யாழ்ப்பாணம்]

“யாழ்ப்பாண நகரத்தை அபிவிருத்தி செய்வதற்கும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கும் ஐக்கிய தேசியக்கட்சிக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுங்கள்”

யாழ் பிறவுன் வீதியில் ஐக்கியதேசியக் கட்சி அபேட்சகர் திரு எஸ். விஸ்வநாதன் இல்லத்தில் நடந்த கருத்தரங்கில் ஐக்கிய தேசியக் கட்சி வடபிராந்திய அமைப்பாளர் திரு. ரி. பரமானந்தராசா மேற்கண்டவாறு கூறினார்.

தமிழ்க் கட்சிகள், கடந்த 25 வருட காலம் எதுவித அபிவிருத்தியும் செய்யவில்லையென்றும் அவர் தெரிவித்தார்.

திருவாளர்கள் வே. தனபாலசிங்கம், பி. யோகநாதன், எம். எக்ஸ். அலெக்ஸ் மற்றும் பலர் பேசினார்கள். (க)

## சதுரங்கப் போட்டியில் வெற்றி

[யாழ்ப்பாணம்]

அகில இலங்கை ‘சதுரங்க’ [“செஸ்”] சம்மேளனம் யாழ் மாவட்ட ரீதியில் நடத்திய சதுரங்கப் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ஆர் பரதன் [7புள்ளிகள்] எஸ் சுதர்சன் [6 புள்ளிகள்] வே சங்கர் [6 புள்ளிகள் ஆகியோர் வெற்றிபெற்றனர்.

ஆர். பரதன், எஸ். சுதர்சன் ஆகியோர் அகில இலங்கை ரீதியில் கொழும்பில் நடாத்தப்பட இருக்கும் சதுரங்கப் போட்டியிலும் பங்குபற்றுவர்.

இவர்கள் இருவரும் கடந்த வருடமும் யாழ் மாவட்டத்தில் நடைபெற்ற ‘செஸ்’ போட்டியில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. [இ]

## கைதடி ச. ச. நி. நடாத்தும் கரபந்தாட்டம்

[யாழ்ப்பாணம்]

கைதடி மேற்கு சன சமூக நிலையம் 30வது ஆண்டு நிறைவையொட்டி குமரன் விளையாட்டுக்கழகத்தால் மின்னொளியில் கரபந்தாட்டப் போட்டியொன்றை நடாத்தவிருக்கிறது.

வடமாகாணத்திலுள்ள ‘செரிஙப்’, ‘ஒவர்சேப்’ விளையாட்டுக் கழகங்களுக்கிடையே இந்தப்போட்டி நடைபெறவிருக்கிறது.

## இன்று

(யாழ்ப்பாணம்)

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ். மாநகரசபைத் தேர்தல் பிரசாரக் கூட்டம் இன்று மாலை யாழ்ப்பாணம் ஐந்து சந்தியில் ஜனாப் எஸ், எம், சுல்தான் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில், கம்யூனிஸ்ட் கட்சியின் வடபிரதேச தலைவர்களும், வேட்பாளர்களும் உரையாற்றவுள்ளனர். (செ)

# கடைசிதேர்தல் என்றவர்கள்

## மீண்டும் தேர்தலில் குதித்ததேன்?

### பாஷையூரில் குமார் கேள்வி

(யாழ்ப்பாணம்)

"கடந்த பொதுத்தேர்தல் பிரசாரத்தின்போது இது தான் கடைசித் தேர்தல் என்றும் இனிமேல் எந்தத் தேர்தலிலும் போட்டியிடமாட்டோம் என்றும் கூறிய கூட்டணியினர் இன்று வீடு வீடாகச் சென்று தேர்தல் பிரசாரம் செய்வதேன்?"

பாஷையூரில் நடந்த தமிழ்க் காங்கிரஸ் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிய தமிழ்க் காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு குமார் பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினார்.

திரு பிலிப் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு குமார் பொன்னம்பலம் மேலும் கூறியதாவது:

தமிழ்மக்களின் பெரும்பான்மை ஆதரவு தங்களுக்கு உண்டென்று கூறிய கூட்டணி எம்பிக்கள். இரவு பகலாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரசாரத்தில் இறங்கியுள்ளார்கள் வீட்டுக்கு வீடு கருத்தரங்கு நடத்துகிறார்கள் மக்கள் ஆதரவு உண்டென்றால் இதெல்லாம் எதற்கு?

ஜே. ஆருடன், மாவட்ட மந்திரிப் பதவிக்கு கூட்டணியினர் பேரம் பேசினார்கள். நான் இதனை அம்பலப்படுத்தியதும் அப்பேச்சைவிட்டுவிட்டார்கள்

தமிழ்க்காங்கிரஸ் வேட்பாளர் பட்டியலிலிருந்து எவரும் விலகவில்லை. சற்குணநாதன் போட்டியிட விரும்பாவிட்டால், எனக்கு அறிவித்திருப்பார். ஆனால் கூட்டணிக் காரியாலயத்திலிருந்தே, அவர் விலகிவிட்டார் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. எனக்கு எவ்வித விலகல் கடிதமும் வரவில்லை."

டாக்டர் ஏ. எல். ஏபிரகாம், திரு. ஈ. மகேந்திரராஜா மற்றும் பலர் பேசினார்கள். [கொ]

# "கூட்டணித்தலைவர் பதவியை ஜி. ஜி. விரும்பியே வகித்தார்"

### கூட்டணி வேட்பாளர் 'விசு' உரை

[யாழ்ப்பாணம்]

மறைந்த தலைவர் திரு ஜி ஜி பொன்னம்பலம் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களில் ஒருவராகத் தமது விருப்பத்துடனேயே இருந்தார். அப்படி அந்தத் தலைமையை அவர் விரும்பியிருக்காவிட்டால் ஒரு தொலைபேசி மூலம் பத்திரிகையாளர்களை அழைத்து மறுப்புத் தெரிவித்திருக்கலாம். அவர் அப்படிச் செய்யவில்லை. தமிழ்மக்கள் மத்தியிலுள்ள உணர்வை, ஐக்கியத்தைச் சிதறடிக்கக் கூடாது என்பதற்காகவே அவர் அதனை மறுக்கவில்லை என்பதை யாரும் மறுக்கவும், மறைக்கவும் முடியாது"

இவ்வாறு நேற்று முன்தினம் ஆனைப்பந்தி உயர் கலைக் கல்லூரியில் யாழ் மாநகரசபைத் தேர்தலில் போட்டியிடும் தமிழர் விடுதலைக் கூட்டணி அபேட்சகர்களை ஆதரித்து இலங்கைச் சட்டக் கல்லூரி தமிழ் மன்றத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்தில் உரையாற்றிய சட்டத்தரணி ஆர் விஸ்வநாதன் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"தமிழ்த் தலைவர்கள் தமக்கிடையே இருந்த பேதங்களையும் மறந்து ஒன்றுபட்டும் கூட்டணி என்ற ஒரு ஐக்கிய அணியை உருவாக்கினர். அதை இன்று ஒரு சில சந்தர்ப்பவாதிகள் தமது சுய நலனுக்காகப் பிளவுபடுத்த முனைகின்றார்கள்.

"வட்டமேசை மகாநாடு மூலம் நமது பிரச்னைகளைத் தீர்க்கலாம் என தேர்தலுக்கு முன் பேசியவர்கள் இன்று தேர்தல் முடிந்து இரண்டு வருடங்கள் ஆகியும் எந்த வித நடவடிக்கையும் எடுத்தார்களா? சிறிமாவோவின் ஆட்சிக்காலத்தில் எதிர்க்கட்சியிலிருந்த திரு ஜே ஆர் ஜெயவர்த்தனு தரப்படுத்தலைத்தாம் எதிர்ப்பதாகக் கூறினார். ஆனால் இன்று அதை விடப்பயங்கரமான படுமோசமாகத் தமிழ் மாணவர்களை நடத்துகின்றனர். தமிழ்ப்பகுதி ஏழை விவசாயிகளுக்கு எதிராக 'விளை பொருட்களை இறக்குமதி செய்கிறார்கள்.

"1944ல் இருந்து மறைந்த தலைவர் திரு ஜி ஜி பொன்னம்பலம் தமிழர் பிரச்னைகளை ஒற்றை ஆட்சிமூலம் தீர்க்கலாம் எனவும், தந்தை செல்வா இணைப்பாட்சி மூலம் தீர்க்கலாம் எனவும் நம்பியிருந்தனர். அன்றிலிருந்து இன்றுவரை எமது இனத்தின் விடுதலைக்காக நாம் நடத்தி வந்த எந்தவொரு போராட்டத்திலாவது திரு குமார் பொன்னம்பலம் ஈடுபட்டாரா? 77ல் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொள்கைகளை ஏற்றுக் கொண்டு தமிழ் தொகுதியில் போட்டியிட்ட திரு குமார் இன்று ஐக்கியம் பற்றிப் பேசுவது வியப்பாக இருக்கிறது."

#### பொய்பிரசாம்

சட்டக் கல்லூரித் தமிழ் மன்றத் தலைவர் திரு தவராஜா பேசுகையில்: தமிழ் மன்றம் தமிழர் விடுதலைக் கூட்டணியை ஆதரித்து பிரசாரம் செய்ய இங்கு வந்த வேளையில் சட்டக்கல்லூரியில் அவ்வாறான ஒரு தமிழ் மன்றமே இல்லையென உண்மைக்கு மாறான வதந்தி ஒன்றை திரு குமார் பொன்னம்பலம் பரப்பி இருந்தார் இவ்வாண்டுக்குரிய சட்டக்கல்லூரித் தமிழ் மன்றத் தலைவர் என்ற முறையில் இதற்குப்பதிலளிக்க வேண்டிய கடப்பாடு என்னைச் சார்ந்தது. தமிழ்மன்றம் இன்று நேற்றல்ல 1950 ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அதன் முதல்தலைவராக இருந்தவர் இன்றைய எதிர்க்கட்சி முதல்வர் அமிர்தலிங்கம் என்று கூறுவதில் பெருமை அடைகிறேன். உபதலைவராக இருந்தவர் மானிப்பாய்த் தொகுதி பா. உ. தர்மலிங்கம் ஆவார். அது மட்டுமன்றி இன்று பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்கும் அநேக உறுப்பினர்கள் தமிழ்மன்ற அங்கத்தவராக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

திரு. குமார் பொன்னம்பலம் கடந்தவருடம் தனது தந்தை ஜி ஜி பொன்னம்பலம் ஞாபகார்த்தமாகத் தமிழ்மன்றத்திற்குத் தங்கப் பதக்கம் ஒன்றை வழங்கியதை மறந்துவிட்டாரா? அமைச்சர் ஜனுப் 100 பஸ்களை அனுப்புவதாக உறுதிகூறிச்சென்றுள்ளார். அவ்வாறு பஸ்களை அனுப்புவதன்மூலமோ வேறு சலுகைகளின் மூலமோ தமிழ் மக்களின் கொள்கையை மாற்றிவிட முடியாது"

திரு சந்திரகாசன் பேசுகையில் கூறியதாவது:

"தமிழ் மக்களுக்கு அரசு நேசக்கரம் நீட்டுவதாகவும், அதைப்பற்றிப் பிடித்துப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய முன் வருமாறும் இங்கு வந்திருக்கும் அமைச்சர்கள் கூறி வருகின்றார்கள். இனக் கலவர காலத்தில் வவனியாவில் பொலிஸ் அதிகாரி திரு. கந்தசாமி பொலிஸ் அதிகாரிகள் முன் கலகக்காரர்களால் தாக்கப்பட்டபோதும், அநியாயமாகத் தமிழ் மக்களின் உயிர்கள் பறிக்கப்பட்டபோதும் அதைத் தட்டிக்கேட்க திராணியற்றவர்கள்- இனத்துவேஷத்தைக் கக்குகின்ற திரு சிறில் மத்தியூ பாராளுமன்றத்தில் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கத்தைக் கேவலமாகப் பேசியபோது அதைவரவேற்றுக் கைதட்டி வரவேற்றவர்கள்- இன்று உங்களிடம் கைநீட்டி வாக்கு கேட்க வந்திருக்கிறார்கள்.

"தமிழ் மக்களுக்கு எதிராக அரசு நடவடிக்கைகள் எடுத்தபோதெல்லாம் அமைச்சரவையில் தேவா போன்ற தமிழ் அமைச்சர்கள் இருந்தார்களே இவர்களால் அவற்றை தடுத்து நிறுத்த முடியவில்லை. அத்தகைய அரசா - தமிழ் மக்களுக்கு இந்த நாட்டில் பாதுகாப்பளித்து ஐக்கியத்தை உண்டுபண்ணப் போகிறது?" [கா-அ]


## யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம்

17—5—79 நடைபெறவிருந்த மேற்படி சங்கத்தின் பொதுக்கூட்டம் 9-6-79 சனிக்கிழமை காலை 9-30 மணிக்குப் பின்போடப்பட்டுள்ளது அங்கத்தவர்கள் அனைவரையும் அழைக்கின்றோம். அங்கத்துவ சந்தா ரூ 2/-

2472 செயலாளர்.



## நன்றி நவிலல்

"அன்னவாசா" அச்சுவேலியைச் சேர்ந்த எங்கள் அன்புத்தாயார் திருமதி சிவக்கொழுந்து கந்தையா அவர்களின் மரணச் சடங்குகளின்போது நேரில் சமூகம் தந்தும் அனுதாபச் செய்திகள், மலர் வளையங்கள் அனுப்பியும் மற்றும் பல வழிகளிலும் உதவிகள் புரிந்தும் ஆறுதலளித்த உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். தனித்தனி நன்றி தெரிவிக்க முடியாமைக்கு வருந்துகிறோம். 2474


# பேராசிரியர் ஆறு. அழகப்பன் இன்றைய சிறப்புரைகள்

(யாழ்ப்பாணம்)

அண்ணாமலைப் பல்கலைக் கழக துணைப்பேராசிரியர் டாக்டர் ஆறு. அழகப்பன் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ளார்.

கொழும்பிலிருந்து நேற்று யாழ் வந்து சேர்ந்த பேராசிரியர் டாக்டர் ஆறு அழகப்பன், திங்கட்கிழமைவரை இங்கு தங்கியிருந்து பல முன்னணி கல்லூரிகளிலும், ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளிலும் சிறப்புரை ஆற்றுவார்.

#### இன்றைய விரிவுரைகள்

இன்று காலை 8-30க்கு சுண்டிக்குளி மகளிர் கல்லூரியிலும் 10-30க்கு கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியிலும் சிறப்புரைகள் ஆற்றும் பேராசிரியர் ஆறு அழகப்பன், பிற்பகல் 2-00 மணிக்கு யாழ். பல்கலைக் கழகத்துக்குச்சென்று பேராசிரியர்களையும், ஆராய்ச்சியாளர்களையும் சந்தித்து உரையாடுவார்.

நாளைக் காலை 9-00 மணிக்கு பலாலி ஆசிரியர் கலாசாலையில் 'தற்காலத் தமிழ் இலக்கிய வளர்ச்சி' என்னும் பொருள் பற்றி உரையாற்றுவார்.

பேராசிரியர் ஆறு அழகப்பன், கண்டி வீதி யாழ். வை. எம். சி. ஏ யில் தங்கியிருக்கின்றார்.

## தஞ்சை இடைத்தேர்தல் போட்டி:

# பொதுக்குழு முடிவை கருணாநிதி ஏற்பார்

(சென்னை)

தஞ்சாவூர் இடைத்தேர்தலில் தாம் போட்டியிடுவதா இல்லையா என்பதைப்பற்றி 21, 22ம் திகதிகளில் தஞ்சையில் கூடவிருக்கும் தி. மு. கழகத்தின் ஆட்சிக்குழுவே முடிவு எடுக்குமென்று நேற்று பத்திரிகை நிருபர்களிடம் பேசும்போது தி. மு. க தலைவர் திரு. மு. கருணாநிதி தெரிவித்தார். குழுவின் முடிவு எதுவாகிலும் தாம் அதற்குக் கட்டுப்பட்டு நடப்பதாகவும் கலைஞர் கூறினார்.

தஞ்சையில் நேற்று நிருபர்களைச் சந்தித்த திரு. கருணாநிதி இம்மாதம் 23ம் திகதி தி. மு கழக வேட்பாளர் தமது கட்டுப்பணத்தைச் செலுத்துவார் என்று கூறினார்.

புதுடில்லியில்விவசாயிகளின் கோரிக்கைகள் தொடர்பாக தமிழ்நாடு முதல்வர் திரு எம் ஜி. ராமச்சந்திரன் பேரணி ஒன்றை நடத்தப்போவதாக அறிவித்துள்ளார் என்றும் இது தஞ்சையிலும் நாகபட்டினத்திலும் நடைபெறவிருக்கும் இடைத்தேர்தலையொட்டி அப்பகுதி விவசாயிகளை ஏமாற்றுவதற்காக நடத்தப்படும் முயற்சி என்றார். இந்தப்பேரணியை தி. மு. கழகம் புறக்கணிக்கும் என்றும் அவர் சொன்னார்.

நேற்று தஞ்சை தேர்தலுக்கான வேட்பு மனுக்களை இரு சுயேச்சையாளர்கள் தாக்கல் செய்தனர்.

நாகபட்டினத் தொகுதிக்கு இந்திய கம்யூனிஸ்ட்கட்சியின் சார்பில் கே. முருகையா கட்டுப்பணம் செலுத்தியுள்ளார். இவருக்கு மாற்று வேட்பாளராக திரு தமிழரசன் வேட்புமனு தாக்கல் செய்துள்ளார்.

இந்த இரு இடங்களுக்கும் வேட்புமனு கொடுக்கும் கடைசித்தினம் 23ம் திகதியாகும்.

## கருத்து 'வழங்க...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கடல் வளம் நிறைந்தநாடு வடபகுதி. இங்கு வாழும் மீனவர்கள் கடந்த பல வருடங்களாக கஷ்டங்களை அனுபவித்துவருகின்றனர், இவ்வங்கி மூலம் கடன்பெற்று மீனவர்கள் வசதியாக வாழமுடியும்.

இங்கு கடல் அட்டைத் தொழிலையும் மீன்பிடித் தொழிலையும் அபிவிருத்தி செய்ய அரசு முயல்கிறது. சீனோர் மூலம் பல இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க முடியும்.

சிறிமா ஆட்சியில் இந்த நாட்டில் இருந்த பல ஐஸ் தொழிற்சாலைகள் மூடப்பட்டன. நாம் அத்தொழிற்சாலைகளை மீண்டும் ஆரம்பித்து ஐஸ் தட்டுப்பாட்டை நீக்கி மீன்பிடித்தொழிலை மேலும் அபிவிருத்தியடையச் செய்வோம்.

கடந்த ஆட்சிக் காலத்தில் மீனவர்கள் தங்களுக்குத் தேவையான மீன்பிடி வலைகளைக்கூடப்பெறமுடியாது கஷ்டப்பட்டனர். நாம் மீனவருக்குத் தேவையான வலைகளை இறக்குமதிசெய்து மலிவான முறையில் வழங்குவோம்,

ஒரு லட்சம் ரூபா பெறுமதியான வள்ளங்களை மானிய முறையில் அறுபத்தையாயிரம் ரூபாவுக்கு வழங்குகிறோம், அதில் 85 வீதப் பணத்தை வங்கி மூலம் வட்டியில்லாக் கடனாகப் பெறமுடியும்.

வடபகுதி மீனவர்களின் நலன் கருதி மயிலிட்டியில் மீன்பிடித்துறைமுகம் ஒன்றைக் கட்டவுள்ளோம். இதன் மூலம் வடபகுதி மீனவர்கள் பலன் பெறமுடியும். அதேபோல் மீனவர்களுக்கு பாடசாலை வசதி. இருப்பிட வசதி ஆகியனவும் கவனிக்கப்படும், [கொ]

## மரண அறிவித்தல்

### அ. வள்ளிப்பிள்ளை

நவத்கிரியைச் சேர்ந்த வள்ளிப்பிள்ளை காலமானார். இவர் காலஞ் சென்ற அப்புக்குட்டியின் மனைவியும், இராசம்மா, இராசலட்சுமி ஆகியோரின் தாயாரும். நல்லையா, கதிரவேலு ஆகியோரின் மாமியாரும் சிவபாதம் (ஆசிரியர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்). வேலும்மயிலும் (ஹிறிஸ்), விஜயாமூர்த்தி (கராச்சி), சச்சிதானந்தம் (ஹிறிஸ்), விவேகானந்தன், லோகேஸ்வரன் (வானிலை ஆராய்ச்சிப் பகுதி யாழ். விமான நிலையம்), சங்கரப்பிள்ளை (யாழ். விமான நிலையம்), கனகராசா, கருணானந்தன், குகநேசன், சுதமதி, தவமணி, சந்திரலீலா, றஞ்சினி ஆகியோரின் பாட்டியும், வசந்தன், யாழினி, வாசுகி, செந்தூரன், மயூரன் ஆகியோரின் பூட்டியும் ஆவர். ஈமக்கிரியைகள் 17-05 1979 நவத்கிரியில் நடைபெறும். 2476

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு மே மாதம் 17-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Reegistered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QB/8945/78 The Eelanaadu P B No 49, Telegram: Eelanaadu! Telephone: 882.